IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

MCOP.NO. - 224/2020

P.W.1 - மகாலஷ்மி க/பெ. சீனிவாசன்

DATE - 03.11.2023

ம .சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு 2 ஆம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

என் கணவரின் வயது மற்றும் வருமானத்தை நிருபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் எந்த வண்டியில் சென்றார் டி.வி.எஸ் 50 வண்டியில் சென்றார். அந்த வண்டியை ஒட்டி சென்றபோது தலைகவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல, அணிந்து சென்றார். தலைகவசம் சரியாக அணிந்து சென்று இருந்தால் என் கணவருக்கு தலையில் அடிபட வாய்பில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ. 4 ஆவணத்தில் வாகனத்தின் பதிவு எண் குறிப்பிடவில்லை என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. முதல் எதிர் மனுதாரர் வாகனத்தை ஒட்டி சென்ற நபருக்கு முறையான ஒட்டுனர் உரிமம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. என் கணவர் தான் வேகமாக சென்று முதல் எதிர் மனுதாரர் வாகனத்தின் மீது மோதி விட்டார் என்றாலும் விபத்திற்கு என் கணவர் தான் காரணம் என்றாலும் சரியல்ல. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் ஓட்டலில் வேலை செய்கிறேன். நான் கேட்டுள்ள நஷ்ட தொகை மிகவும் அதிமானது என்றால் சரியல்ல. முதல் எதிர் மனுதாரர் வாகனத்தை ஒட்டிய நபருக்கு ஒட்டுனார் உரிமம் இல்லை என்பதால் 2 ஆம் எதிர்மனுதாரர் எங்களுக்கு எந்தவதி நஷ்டமும் வழங்க கடமைபட்டவர் அல்ல என்றாலும் நஷ்டஈடு எதுவும் பெறு முதல் எதிர் மனுதாரரிடம் இருந்து தான் பெறவேண்டும் என்றாலும் சரியல்ல.

P REVATHY

Digitally signed by P REVATHY